அன்பான வாடிக்கையாளர்களே,

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அநுசரித்து, உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கித்தொழில் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் (KFD) கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கித்தொழில் வாடிக்கையாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கணக்குடன் தொடர்புபட்ட விசேட பொதிகள் அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுடனும் சேர்த்து வேறுபட்ட வகையான இலங்கை ரூபாய் கணக்குகள் பற்றிய விரிவான விபரங்களை முக்கிய விடய ஆவணம் உங்களுக்கு தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்கு உட்படும் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின், பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது 24 மணி நேர அழைப்பு நிலையம் 011 4 711411.

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில், தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை **The Complaints Resolution Officer, Nations Trust Bank PLC, 242, Union Place, Colombo 2** என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக [+94(0)11 4711411]/ **[customerservice@nationstrust.com]** என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு வகைகள் | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| தவணை வைப்புகள் | | | | |
| **நேஷன்ஸ் நிலையான வைப்பு** | வட்டி வீதமானது 1 மாதம் தொடக்கம் 60 மாதங்கள் வரையான தவணைக் காலத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும். வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப முதிர்ச்சியின் போது மாதாந்தம் அல்லது வருடாந்த அடிப்படையில் வட்டி கொடுப்பனவு செய்யப்படும்.<br><br>30 நாட்களில் இருந்து 365 வரையான நாட்களினுள் தேவையான நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிலையான வைப்பினை தொடங்குவதற்கான தெரிவு.<br><br>நிலையான | நிலையான வைப்பினை பேணுவதற்கு கட்டணங்கள் அறவிடப்படாது. | தவணை வைப்புகளுக்கான வங்கியின் கணக்கு ஆரம்பிக்கும் நியமப் படிவம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>▪ தேசிய அடையாள அட்டையின் பிரதி/செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>▪ வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் இருந்து வேறுபடுமாயின், முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | தகைமைப் பிரமாணம்:<br><br>▪ செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை/ கடவுச்சீட்டை வைத்திருக்கின்ற அத்துடன் இலங்கையில் வதிகின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை தேசத்தவர்கள்.<br><br>▪ குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ. 50,000 ஆகவிருத்தல் வேண்டும்.<br><br>▪ வைப்பிலிடப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குப் முன்னர் மீளப்பெறுமாயின் (வைப்புத் திகதி உள்ளடங்கலாக மற்றும் மீளப்பெறும் திகதி நீங்கலாக) வட்டி எதுவும் கொடுப்பனவு செய்யப்படாது.<br><br>▪ நிலையான வைப்பானது முதிர்ச்சியடைவதற்கு முன்னர் மீளப்பெறப்படுமாயின், கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி, வங்கியின் தற்றுணிபில் இணங்கியதைவிட குறைவாக கணிக்கப்படும்.<br><br>▪ முதிர்ச்சியடைவதற்கு முன்னர் நிலையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | வைப்பின் பெறுமதியின் 90% வரை மேலதிகப்பற்று மற்றும் கடன் வசதிகள் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை. | | | வைப்பினை மீளப்பெறுவதற்கு கோரிக்கை முன்வைக்கப்படுமாயின் அத்துடன் அத்தகைய கோரிக்கை வரை மாதாந்த அடிப்படையில் வாடிக்கையாளருக்கு வட்டி கொடுப்பனவு செய்யப்பட்டு வந்திருப்பின், ஆரம்ப வைப்புத்தொகையில் இருந்து முதிர்ச்சியடைவதற்கு முன்னர் மீளெடுப்பதற்கான கட்டணம் கழிக்கப்படும். |
| கோல் டிப்போசிட்ஸ்<br><br>(Call Deposits) | வட்டியானது குறைந்தபட்சம் 7 நாட்களுக்காக கணிக்கப்படுவதுடன் முதிர்ச்சியில் கொடுப்பனவு செய்யப்படும். | கோல் டிப்போசிட்களைப் பேணுவதற்கு கட்டணங்கள் அறவிடப்படாது. | தவணை வைப்புகளுக்கான வங்கியின் கணக்கு ஆரம்பிக்கும் நியமப் படிவம் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>▪ தேசிய அடையாள அட்டையின் பிரதி/செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>▪ வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் இருந்து வேறுபடுமாயின், முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | தகைமைப் பிரமாணம்:<br><br>▪ செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை/ கடவுச்சீட்டை வைத்திருக்கின்ற அத்துடன் இலங்கையில் வதிகின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைத் தேசத்தவர்கள்.<br><br>▪ குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ. 100,000 ஆகவிருத்தல் வேண்டும்.<br><br>▪ குறைந்பட்ச காலம் 7 நாட்களாகவிருக்க வேண்டும்.<br><br>▪ 7 நாட்கள் கொண்ட குறைந்தபட்ச காலத்திற்கு முன்னர் வைப்பு மீளப்பெறப்படுமாயின், வட்டி எதுவும் கொடுப்பனவுசெய்யப்படாது. |